கபீர் புரஸ்கார் விருது–2022

பொது (பொது–1)த் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை –600009.

கடித எண்.42001/பொது–1/2021–1, நாள்:15.11.2021

அனுப்புநர்
முனைவர் டி. ஜகந்நாதன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

3860

பெறுநர்
அனைத்து துறைச் செயலாளர்கள்,
சென்னை – 9. (இணைப்புடன்)

ஐயா / அம்மையீர்,

பொருள்: ''கபீர்புரஸ்கார்'' விருது – 2022 – தகுதியான விண்ணப்பங்கள் அனுப்பக் கேட்டல் – தொடர்பாக.

பார்வை: அரசாணை (நிலை) எண். 962, பொது (பொது.1)த் துறை, நாள் 02.09.1996.

*****

பார்வையில் காணும் அரசாணையின்பால் தங்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது. (நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது). ஆண்டுதோறும் குடியரசு தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமூக / வகுப்பு நல்லிணக்கத்திற்காக வழங்கப்பட்டு வரும் ''கபீர் புரஸ்கார்'' விருது, 2022–க்கான தகுதி வாய்ந்த விண்ணப்பங்களை பார்வையில் உள்ள அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிகளின்படி இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்தில் பெற்று 15.12.2021–க்கு முன்னர் தங்கள் பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்குறிப்பிடப்பட்டுள்ள தேதிக்குப் பின்னர் தாமதமாகப் பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலாளருக்காக.

பொது (பொது—1)த் துறை

## கபீர் புரஸ்கார் விருது

| | | | |
|---|---|---|---|
| 1. | முழுப் பெயர் (தமிழில்) | : | |
| 2. | முழுப் பெயர் (ஆங்கிலத்தில்) | : | |
| 3. | பிறந்த தேதி / வயது | : | |
| 4. | தந்தை பெயர் | : | |
| 5. | இருப்பிடம் | : | |
| 6. | கல்வித் தகுதி | : | |
| 7. | தொழில் | : | |
| 8. | தற்போதைய முகவரி | : | |
| 9. | நிலையான முகவரி | : | |
| 10. | குடும்ப உறுப்பினர் விவரம் | : | |
| 11. | குற்றம் சாராத / குற்ற இயல் சார்ந்த நடவடிக்கை ஏதும் ஈடுபட்டுள்ளாரா | : | ஆம் / இல்லை |
| 12. | இன/மத/சாதி கலவரத்தின் போது நியமனம் செய்தவரின் தைரிய முயற்சி குறித்த குறிப்பு இணைக்கப்பட்டுள்ளதா | : | ஆம்/இல்லை |
| 13. | மாவட்ட ஆட்சியர் / துறைத் தலைவர்கள் பரிந்துரை இணைக்கப்பட்டுள்ளதா | : | ஆம்/இல்லை |
| 14. | மத நல்லிணக்கம் / சமுதாய ஒற்றுமை / தேசிய ஒருமைப்பாட்டிற்காக ஆற்றிய மற்ற பணிகள் ஏதேனும் இருப்பின் | : | |
| 15. | வேறு ஏதேனும் தொடர்புடைய நிகழ்வுகள் | : | |

சான்றுகள் (தனியான தாள் இணைக்க வேண்டும்)

250 வார்த்தைகளுக்கு மிகாமல் தனியர் பற்றிய முழுவிவரம் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அளிக்க வேண்டும்.

குறிப்பு:-

அனைத்து விவரங்களும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் விருதுக்கான மனு நிராகரிக்கப்படும்.

கையொப்பம்:

பதவி:

டி. ஜகந்நாதன்,
அரசு செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

15/11/2021